செ.வெ.எண்: 56/2021 நாள்: 22.10.2021

## அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

## சேலம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.எஸ். சிவ சண்முகராஜா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் தகவல்.

---

சேலம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் சேலம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத் தலைவர் / மேலாண் இயக்குநர் திரு.எஸ்.சிவ சண்முகராஜா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ. கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (22.10.2021) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சேலம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத் தலைவர் / மேலாண் இயக்குநர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசால் செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்களை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையிலும், வளர்ச்சித் திட்டப் பணிகளை விரைவுபடுத்தவும், பருவமழை காலங்களில் போதிய முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ளவும் அனைத்து மாவட்டங்களுக்கும் கண்காணிப்பு அலுவலர்களை நியமனம் செய்துள்ளார்கள். அந்த வகையில் இன்றைய தினம் சேலம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காலங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது.

குறிப்பாக, வடகிழக்கு பருவமழை காலங்களில் கடந்தகால நிகழ்வுகளை கருத்தில் கொண்டு, மழையால் பாதிப்பு ஏற்படக் கூடிய இடங்களை முன்னதாகவே கண்டறிந்து அவ்விடங்களுக்கு தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் போதிய அளவில் நோய்தடுப்பு மருந்துகள் இருப்பில் வைத்திருக்க வேண்டும். அனைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் குளோரினேசன் செய்திட வேண்டும்.

மேலும், தொற்றுநோய்கள் ஏற்படாத வகையில் அனைத்து பகுதிகளிலும் குப்பைகள் தேங்காத வண்ணம் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகள் பார்த்துகொள்ளவதோடு, சாலைகளில் வாகன ஓட்டிகளுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாத வகையில் சாலையோரங்களில் மழை நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், நெடுஞ்சாலைத்துறையினர் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளின் தங்கு தடையற்ற போக்குவரத்தை உறுதி செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாவட்ட

முதன்மை கல்வி அலுவலர் அனைத்து பள்ளிகளிலும் உள்ள கட்டிடங்களின் உறுதித்தன்மையினை கண்டறிந்து பழுதுகள் இருப்பின் உடனடியாக நிவர்த்தி செய்திட வேண்டும். நீர்நிலைகளின் நீர் இருப்பு விவரம் குறித்த நிலவரங்களை தினசரி மாவட் நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பொதுமக்கள் '1077' என்ற கட்டமில்லா தொலைபேசி எண்ணிலோ, மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் அறை எண்.121-இல் செயல்பட்டு வரும் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறை 0427-2452202 என்ற தொலைபேசி எண்ணிலோ 24 மணிநேரமும் தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கும் வகையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு சேலம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத் தலைவர் / மேலாண் இயக்குநர் திரு.எஸ்.சிவ சண்முகராஜா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, சேலம் பள்ளப்பட்டி ஏரி மற்றும் சேலம் ஆனந்தா பாலம் அருகில் திருமணிமுத்தாறு மழை நீர் வடிகால் அமைப்பினை சேலம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத் தலைவர் / மேலாண் இயக்குநர் திரு.எஸ்.சிவ சண்முகராஜா, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் திரு. தா. கிறிஸ்துராஜ், இ.ஆ.ப., மாநகர காவல் ஆணையாளர் திரு. நஜ்மல் ஹோடா, இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் முனைவர் வெ.ஆலின் சுனேஜா உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு** : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.